கிறோம் என்று பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதற்கு உதவி செய்கின்ற வகையில் இருக்கக்கூடிய விற்பனை வரி ஏன் கள்ளுக்கு விதிக்கப்படவில்லை? அது மதுவிலக்கு ரத்தைப்பற்றிய அரசின் கொள்கைக்கு முரண் இருக்கிறதல்லவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கள்ளுக்கு ஏன் விற்பனை வரி விலக்கு என்பது கேள்வி. உற்பத்தியாகின்ற எல்லாப் பொருட்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதனால் விற்பனை வரி விதிக்கலாம். ஆனால் கள் மரத்திலிருந்து எவ்வளவு இறக்கப்படுகின்றது என்பதைப் பார்த்து விற்பனை வரி விதிப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசீலித்துப் பார்த்துத்தான் விற்பனை வரி விதிக்க வேண்டும்.

Select Committee of Parliament on sales tax

*266 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to give evidence before the Select Committee of Parliament on Sales Tax meeting in this State in October, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஆம். ஆனால் 1971 அக்டோபர் மாதத்தில் நடக்கவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பிரேரணைகள் இரகசியமானவைகளாக நாடாளுமன்றத் தேர்வுக் குழு கருதுவதால் விவரங்கள் வெளியிடுவதற்கில்லை.

பல்லடம், அவினாசி வட்டங்கள்

* 267 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம், அவினாசி வட்டங்களை நிரந்தர பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நிவாரண வேலைகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

Deputy Tahsildars in Kanyakumari district.

*268 Q.—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether the list of Regular Deputy Tahsildars in Kanyakumari Revenue Unit for 1968 and 1969 have been drawn up and published; and

(b) if not, whether the Government will take early steps for publishing and implementing the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) ஆம்.